

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், நேற்று முன்தினம் (11.9.2025) சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று 13.9.2025 இன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெறவுள்ள ”சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜாவின் பொன்விழா ஆண்டு 50” பாராட்டு விழா விற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் முதலமைச்சரின் செயலாளர் முனைவர் ம.சு. சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று முன்தினம் (11.9.2025) இசைஞானி இளையராஜா எம்.பி., இல்லத்திற்கு நேரில் சென்று 13.9.2025 இன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெறவுள்ள ”சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜாவின் பொன்விழா ஆண்டு 50 பாராட்டு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் முதலமைச்சரின் செயலாளர் முனைவர் ம.சு. சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் ஆகியோர் உள்ளனர்.

# தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!

*தருமபுரி, செப். 13*



*தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (13.09.2025 - சனிக்கிழமை) காலை 10:30 மணி அளவில், காரியமங்கலம், மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.மனோகரன் தலைமையில் நடைபெறுகிறது.*

அதுசமயம் நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், பேரூர் கழகச் செயலாளர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: *1) 09.09.2025 அன்று காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைகள் மற்றும் 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்தும், 2) 15.09.2025 அன்று பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா குறித்தும், 3) 17.09.2025 அன்று கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழா குறித்தும், 4) “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை குறித்தும் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.*

இவ்வாறு தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று முன்தினம் (11.9.2025) உலக நாயகன் கமல்ஹாசன் எம்.பி., இல்லத்திற்கு நேரில் சென்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் இன்று (13.9.2025) நடைபெறவுள்ள “சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜாவின் பொன்விழா ஆண்டு 50” பாராட்டு விழா விற்கான அழைப்பிதழை வழங்கினார்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன், கரூரில் வருகின்ற செப்டம்பர் 17 அன்று நடைபெற விருக்கும், தி.மு.க. முப்பெரும் விழா ஏற்பாடுகள் குறித்தான, கரூர் சட்டமன்றத் தொகுதி செயல் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கூட்டம், கரூர் பிரேம் மகாலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பெருந்திரளான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

**பா**கத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 9–இல் சோழவந்தான், மதுரை வடக்கு ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 13.09.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | சோழவந்தான் | ஜான்சி மஹால், வாடிப்பட்டி. |
| 14.09.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | மதுரை வடக்கு | ட்வின் மஹால், அண்ணாநகர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 10-09-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



ஆண்டிமடம் கிழக்கு ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.



கீழ்மலை வடக்கு ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



கரூர் மேற்கு ஒன்றியம்,
கரூர் மாவட்டம்.



சத்துவாச்சேரி தெற்கு பகுதி,
வேலூர் மாவட்டம்.



அரக்கோணம் நகரம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.



பெரணமல்லூர் பேரூர்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.